**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 594/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | கனகசபாபதி, வயது 53 |
| Father Name/Husband Name | : | ரத்தினம் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | நகை வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of May 2023.

**(எதிரிகள் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து நகை வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் கோவில்பட்டி பஜாரில் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் செய்து வருகிறார்கள். கடந்த 11.07.2020 ஆம் தேதி நானும் எனது மகனும் எங்கள் கடையில் இருந்த போது காலை 09.30 மணியளவில் 1வது எதிரி கடைக்கு வந்து வீட்டில் நகை இருப்பதாகவும் அவசரமாக ரூ.4,50,000/– பணம் வேண்டும் என்றும் என்னிடம் கேட்டார்.
2. அப்போது நான் 1வது எதிரியிடம் உன்னை நம்பி எப்படி கொடுக்க முடியும் உனது அப்பாவை வரச்சொல் என்று சொன்னேன். பின்னர் அன்று 11.30 மணியளவில் எதிரிகள் இருவரும் எனது கடைக்கு வந்து பணம் ரூ.4,50,000/– பணத்தை 1வது எதிரியிடம் கொடுக்கும் படி 2வது எதிரி என்னிடம் சொன்னார்.
3. நான் அவர்களிடம் தற்போது என்னிடம் பணம் இல்லை என்றும் வீட்டிற்கு சென்று மதியம் 01.30 மணியளவில் பணத்தை எடுத்து வந்து கொடுப்பதாக சொன்னேன். பின்னர் 01.30 மணியளவில் 1வது எதிரிக்கு போன் செய்து எங்கே இருக்கிறாய் என்று கேட்டேன் அவர் அதற்கு விஷ்வகர்மா பள்ளி அருகே நிற்பதாக சொன்னார்.
4. நான் எனது மகன் ராஜசுந்தரிடம் ரூ.4,50,000/– கொடுத்து விடுகிறேன். அதனை வாங்கிக்கொண்டு நகைகளை அவரிடம் கொடுக்கும் படி கூறினேன். 01.35 மணியளவில் எனது மகன் ராஜசுந்தர் 1வது எதிரியிடம் ரூ.4,50,000/– பணத்தை கொடுத்தார். பின்னர் ஒரு மணிநேரத்திற்கு ஒரு முறை நான் போன் மூலம் தகவல் கேட்டுக்கொண்டே இருந்தேன் அவர் நகைகளை எடுத்து வருவதாக

சொல்லிக்கொண்டே இருந்தார்.

5. பின்னர் அன்றைய தினம் 07.00 மணியளவில் நான் பணம் எதுவும் வாங்கவில்லை என்று என்னிடம் கூறினார். பின்னர் நான் மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க கோரி கிழக்கு காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 01.30 மணி முதல் 07.00 மணி வரை எதிரி என்னிடம் போனில் பேசிய ஆடியோ பதிவுகளை பென்டிரைவில் பதிவு செய்து போலிசாரிடம் கொடுத்துள்ளேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நகையை ஈடாக வைத்து பணம் கேட்டதாக தான் வழக்கு என்றால் சரியல்ல நகையை விலைக்கு எடுத்துக்கொள்ளச் சொல்லி பணம் பெற்றார். நகையை பெற்றுக்கொள்ளாமல் பணத்தை கொடுக்கும் நடைமுறை உள்ளதா என்றால் இல்லை ஆனால் நகை வியாபாரத்தில் நம்பிக்கையின் அடிப்படையில் தெரிந்த நபர்களுக்கு கொடுப்போம்.
2. நீங்கள் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்கிறீர்களா என்றால் இல்லை. பழைய நகைகளை வாங்கி விற்கும் தொழில் செய்கிறீர்களா என்றால் இல்லை. எதிரிகள் தரப்பில் இதற்கு முன்னர் உங்களிடம் கடன் வாங்கியதாக புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.
3. எதன் அடிப்படையில் எதிரிகளுக்கு நகையை வாங்காமல் பணம் கொடுத்தீர்கள் என்று விசாரணையில் சொன்னீர்கள் என்றால் சொன்னேன். 1 வது எதிரியின் தகப்பனார் வீட்டில் இருந்து நகையை எடுத்து கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னதை நம்பி கொடுத்தேன்.
4. எதிரியின் வீட்டில் நீங்கள் கொடுத்ததாக சொல்லும் தொகைக்கு ஈடான நகை இருக்குமா இல்லையா என்பது உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். ரூ.4,50,000/- க்கு எத்தனை கிராம் நகை தேவைப்படும் என்றால் சுமார் 100 கிராம் தேவைப்படும். தெற்கு பஜாரில் உங்கள் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான்.
5. என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் தங்கம் வாங்கி நகைகள் செய்து கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன். உங்கள் கடையில் எவ்வளவு தங்கம் வாங்கி எவ்வளவு நகை செய்து கொடுக்கிறீர்கள் என்பதற்கான பதிவேடுகள் உள்ளது என்றால் சரிதான். அதே போல் உங்கள் கடையின் வரவு செலவுகளுக்கும் பதிவேடுகள் உள்ளன என்றால் சரிதான்.

6. மேற்படி பதிவேடுகளை பார்த்தால் தான் அன்றைய தினம் ரூ.4,50,000/– பணம் இருந்ததா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். நீங்கள் புகார் கொடுத்த பின்னர் ஆய்வாளர் உங்கள் கடைக்கு வந்து மேற்படி பதிவேடுகளை ஆய்வு செய்தாரா என்றால் செய்தார். அன்றைய தினம் உங்கள் வசம் ரூ.4,50,000/– இருந்தற்கான ஆவணங்களை எடுத்துச்சென்றார் என்றால் அவர் பார்த்தார் நான் காண்பித்தேன். அதன் நகல் வாங்கிச்சென்றார் என்றால் சரிதான்.
7. அது இந்த வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்றால் சரிதான். கிழக்கு காவல்நிலையத்தில் நீங்கள் கொடுத்த புகாரை வழக்கறிஞர் எழுதினார் என்றால் சரியல்ல நான் தான் எழுதினேன். மேற்படி புகார் மனு நீங்கள் எழுதவில்லை என்றாலும் ஒரு வழக்கறிஞர் தான் எழுதினார் என்றால் சரியல்ல.
8. புகாரில் அடித்தல் திருத்தல் உள்ளதா என்றால் சரிதான் தேதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. புகாரில் உங்கள் செல்போன் எண்கள் எழுதப்பட்டிருந்ததா என்றால் எனது செல்போன் எண்ணை எழுதினேன். செல்போன் எண் எழுதப்பட்ட மையும் இதர எழுத்துக்களின் மையும் வேறு வேறாக உள்ளது என்றால் இல்லை ஒரே மைப்பேனாவினால் தான் எழுதப்பட்டுள்ளது.
9. அ.சா.ஆ.1 புகாரின் மேல் பகுதி கலக்கமாக எழுதப்பட்டு கீழ் பகுதி வரிகள் நெருக்கமாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தீர்கள் என்றால் 12.07.2020 ஆம் தேதி 09.30–10.00 மணிக்குள் கொடுத்தேன். உடனே ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் நகலையும் உங்களிடம் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.
10. புகார் மனுவிலோ போலிசார் விசாரணையிலோ எந்த வகையான பணமாக ரூ.4,50,000/– கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். போலிசார் பணத்தை கைப்பற்றினார்களா என்றால் இல்லை. பணம் கேட்டு வந்த நபர்களுக்கு அலுவலத்திற்கு வரவழைத்து கொடுக்காமல் அவர்கள் இருக்கும் இடத்திற்கு சென்று பணம் கொடுக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளதா என்றால் உண்டு.
11. 2020 ஆம் ஆண்டு கொரோனா தொற்று காரணமாக ஊரடங்கு அமல்படுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். அப்போது வெளியில் நடமாட முடியாது என்றால் ஜீலை மாதம் தான் சம்பவம் நடந்தது. ஜீலை மாதம் ஊரடங்கு அமலில் இருந்தது என்றால் இல்லை. ஊடரங்கு அமலில் இருந்ததால் நீங்கள் சொல்வது போல் உங்கள் கடையை திறந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் எதிரியோ அவரது தந்தையோ உங்கள் கடைக்கு வந்து பணம் கேட்டிருக்க

வாய்ப்பில்லை என்றாலும் உங்கள் மகன் 1வது எதிரியிடம் சென்று பணம் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக பணம் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

12. ஊரடங்கு காலங்கள் நகர் முழுவதும் போலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். 1வது எதிரி தான் உங்களுக்கு ரூ.80,000/- கொடுத்துள்ளார் என்றாலும் அதனை மோசடி செய்ய வேண்டி இந்த புகாரை கொடுத்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.
13. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் 1வது எதிரி வந்து பணம் கேட்டதாக சொல்வதும் 2வது எதிரி உறுதி அளித்ததாகவும் அதன் அடிப்படையில் நீங்கள் உங்கள் மகன் மூலம் பணம் கொடுத்துவிட்டதாக சொல்வதும் அதனை 1வது எதிரி பெற்றுக்கொண்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.
14. நீங்கள் சொன்ன நாள் நேரத்தில் கிழக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.